# வேலைவாய்ப்பின்மை

## வேலையின்மை

தொழிலாளர்கள் வேலை செய்யும் தகுதியும் விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காமல் இருப்பது ஆகும்.

## வேலையின்மை அளவீடுகள்

- ஒரு நபர்> ஒரு நாளைக்கு 8 மணி நேரம் என்ற அளவில், ஒரு வருடத்திற்கு 73 நாட்கள் வரை மட்டும் வேலையில் நியமனம் செய்யப்படுவதையே குறிக்கிறது.
- பகவதி கமிட்டி (1973) பரிந்துரையின்படி வேலையின்மையை 3 வகையாகப் பிரிக்கலாம்
    1. முதன்மை நிலை வேலையின்மை
    2. வாராந்திர நிலை வேலையின்மை
    3. தினமும் வேலையின்மை நிலை

## வேலையின்மைக்கான காரணங்கள்

- அதிக மக்கள்தொகை வளர்ச்சி
- போதுமான பொருளாதார வளர்ச்சி வீதமின்மை
- வேளாண்மை தவிர பிற துறைகளில் வேலை வாய்ப்பு குறைவு.
- பருவ கால வேலைவாய்ப்பு
- கூட்டுக் குடும்ப அமைப்பு
- இந்தியப் பல்கலைக்கழகத்திலிருந்து பெருகி வரும் மாணவர்கள்
- குறைவான தொழில் வளர்ச்சி

## வேலையின்மையின் வகைகள்

### அமைப்பு வேலையின்மை:

- உற்பத்தித் திறன் குறைவினால் வருவது.

### வெளிப்படை வேலையின்மை:



அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- படித்த மற்றும் படிக்காத மக்களிடையே காணப்படும் வேலையின்மை.

### மறைமுக வேலையின்மை:

- உற்பத்திக்கு பங்களிப்பு செய்யாமல் ஒருவா வேலையில் இருப்பது. அவரை நீக்கினாலும் உற்பத்தித் திறன் மாறாது.

### பருவ கால வேலையின்மை :

- விவசாயத் துறையில் வருடம் முழுவதும் வேலை இருப்பதில்லை. குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இருக்கும்.

### இடைக்கால வேலையின்மை :

- ஒருவர் ஒரு பணியில் இருந்து மற்றொரு பணிக்கு மாறும்போது ஏற்படுகிறது.

### உராய்வு வேலையின்மை:

- சந்தை நிலவர மாற்றத்தால் தேவை குறைவு மற்றும் புதிய தொழில்நுட்ப அறிமுகம் காரணமாக ஏற்படுவது.

### குறைவேலையுடைமை:

- ஒருவர் தன் கல்வித் தகுதிக்கு கீழான வேலையில் இருப்பது.

### சுழற்சி வேலையின்மை:

- தொழிலாளர்கள் உபரியாக கிடைக்கும் காலங்களில் இவ்வகை வேலையின்மை ஏற்படுகிறது.

### வேலையின்மை -முக்கிய திட்டங்கள்

இந்தியாவில் ஒருவர் ஒரு நாளில் 8 மணி நேர வேலையை - வருடத்திற்கு 273 நாட்கள் வேலை வாய்ப்பும் கிடைக்காத நிலை வேலைவாய்ப்பின்மை

### பகவதிக் குழு -1973 (திட்டக்குழுவின் பரிந்துரைப்படி)


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

இக்குழு மூன்று மதிப்பீடுகளை அளித்துள்ளது

- வருடத்தில் பெரும்பாலும் வேலையில்லாத நிலை - UPS (Usual Principal Status)
- வாரத்தில் ஒரு மணி நேரம் கூட வேலையில்லாத நிலை - CWs (Curent Weekly Status)
- ஒரு நாளில் (அ) ஒரு சர்வே வாரத்தில் வேலையில்லாத நிலை - CDS (Current Daily Status)

## முக்கிய திட்டங்கள் பதினொன்றாவது ஐந்தாண்டுத்திட்டம்:

- மில்லியன் வேலைவாய்ப்பை ஏற்படுத்துதல்
- வேலைவாய்ப்பு தேவை 80 மில்லியன்
- 58 மில்லியன் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- வேலைவாய்ப்பின்மை 5% குறைத்தல்
- பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டம் -முழு வேலைவாய்ப்பை ஏற்படுத்தாவிட்டாலும், வேலையின்மை 8.3% இருந்து 4.83% குறைத்தல்

## மற்ற திட்டங்கள்

- Food for work Programme : வேலைக்கு உணவு திட்டம்
- IRDP Intergrated rural Development Programme - ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் -1979
- TRYSEM -Training Rural Youth For Self Employment -1979 கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்பு பயிற்சி திட்டம்
- NREP: National Rural Employment programme -1980 தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம்
- RLEGP - Rural Landless Employment Guarantee Programme -1983 நிலம் இல்லாதவர்க்கு வேலைவாய்ப்பு உறுதி திட்டம்
- JRY – Jawhar Rozgar Yojana -1989 ஜவஹர் ரோஸ்கார் யோஜனா
- Bharat Nirman - 2005
- MGNREGP- Mahatma Gandhi National Rural Employment Guarantee Programme -2006 (NREGP Renamed as MGNREGP on Oct 2,2010)


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in